# தொழிற் முன்னேற்ற பாதை

# கம்மியர் ஆட்டோ பாடி பெயிண்டிங்



## ஐடிஐ-யில் பயிற்றுவிக்கப்படும் திறன்கள்:

- வாகன தயாரிப்பு பற்றிய விவரக்குறிப்பு பட்டியல் மற்றும் வாகன அடையாள எண் சரிபார்த்து விளக்கும் பயிற்சி மற்றும் பெயிண்டிங் ஷாப்பில் உள்ள பல்வேறு உபகரணங்களை இயக்கும் பயிற்சி
- வாகனத்தின் பல்வேறு பாகங்களின் பெயர்களை அறிதல் மற்றும் ஏர் கம்பிரஸ்ஸர் – உபகரணத்தில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்து பராமரித்தல் பற்றி அறிதல்.
- ஆர்க் மற்றும் கேஸ் வெல்டிங் மூலம் இணைக்கும் பயிற்சி
- பெயிண்டிங் செய்யப்பட வேண்டிய பாகத்தின் மேற்பரப்பை தயார்படுத்த சுரண்டிகள், உராய்வு பொருட்கள் மற்றும் ரசாயன நீக்கிகளை பயன்படுத்தும் பயிற்சி
- தேர்வு செய்யப்பட்ட கலர் பெற உரிய வெவ்வேறு கலர் பெயிண்ட்களை தேர்ந்தெடுத்து கலக்கும் பயிற்சி.
- எனாமல் மற்றும் லாக்கர் பெயிண்டை பயன்படுத்தி அலங்கார மற்றும் பாதுகாப்பிற்காக பெயிண்ட்களை மரம் மற்றும் உலோகம் மீது ஸ்பிரே பெயிண்ட் கருவிகள் கொண்டு பெயிண்ட் செய்யும் பயிற்சி
- ஸ்பிரே பெயிண்ட் டிரக்கரை சரியான முறையில் அழுத்தும் பயிற்சி மூலம் மேற்பரப்பு மென்மையான மற்றும் சமமான முடிவு நிலையை கொண்டுவரும் பயிற்சி.
- பெயிண்ட் ஷாப் உபகரணங்களை கொண்டு இறுதி தேய்ப்பு, மறைத்தல், ஒளியூட்டுதல் போன்ற திறன்களை மேற்கொள்ளுதல்.

## தொழில் நிறுவனங்கள் எதிர்பார்க்கும் திறன்கள்:

- தரமான முறையிலும் குறித்த நேரத்திலும் வேலை செய்து முடித்தல்
- ஆட்டோமொபைல் பாடியில் அரிப்பு ஏற்படுவதற்கான காரணத்தையும் அரிப்பு ஏற்படாத வண்ணம் பாதுகாத்தல் பற்றி அறிதல்
- பெயிண்ட் ஷாப் கருவிகளை பிரித்து சுத்தம் செய்து ஸ்பிரே கன்னை தூய்மையாக வைத்திருத்தல்
- பெயிண்ட் செய்யும் போது ஏற்படும் குறைபாடுகளை சரிசெய்யும் திறன் பெற்றிருத்தல்

## ஐடிஐ முடித்தபின் வேலைவாய்ப்புகள்:

- ஆட்டோமொபைல் உற்பத்தி செய்யும் இடம் மற்றும் சர்வீஸ் செய்யும் இடங்கள்
- மாநில அரசு - தொழிற்பயிற்சி நிலையம், டிரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன், அரசு தானியங்கி பணிமனை, மற்றும் பல
- மத்திய அரசு - ரயில்வே, ஹெவி வெகிக்கிள் ஃபேக்டரி
- குறு, சிறு மற்றம் நடுத்தர தொழில் நிறுவனங்கள்.

## ஐடிஐ முடித்தபின் என்னவாகலாம்:

### ஆரம்ப நிலை

செமி ஸ்கில்டு டெக்னீசியன், ஹெல்பர், பணிமனை உதவியாளர்

### இடை நிலை

ஸ்கில்டு டெக்னீசியன், இளநிலை பயிற்சி அலுவலர், உதவி பயிற்சி அலுவலர்.

### மூத்த நிலை

மேனேஜர், பயிற்சி அலுவலர், தொழில்முனைவோர், சுய தொழில்

## ஐடிஐ முடித்தபின் என்ன படிக்கலாம்:

- வேலை பழகுநர் பயிற்சி
- கைவினைஞர் திட்ட பயிற்றுநர் பயிற்சி
- பட்டயப்பொறியியல் (டிப்ளோமா படிப்பு)



QUEST ALLIANCE

வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

Industrial Training Institute